மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.120/2021

வாக்குமூலம்: வா.சா.1 – பவித்ரா

27.02.2024: சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– எனக்கு தற்போது 30 வயது ஆகிறது. வழக்கு சொத்தில் எத்தனை வருடங்கள் நாங்கள் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் பிறந்தது முதல் அங்கு தான் இருந்து வருகிறேன். தாவா சொத்து இருந்து வரும் முகவரியும், வா.சா.ஆ.5ல் உள்ள முகவரியும் ஒன்று தான். எனக்கு திருமணம் ஆகி திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பள்ளபாளையத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆதார் அட்டை முகவரியை நான் மாற்றவில்லை. 06.03.1990ம் தேதியன்று என்னுடைய தாயாருக்கு வழக்கு சொத்தை பொறுத்து பட்டா வழங்கிய விபரம் எனக்கு தெரியும். என்னுடைய தாயார் சொல்லியுள்ளார்.என்னுடைய தாயாருக்கு பட்டா வழங்குவதற்கு முன்பிலிருந்தே அந்த முகவரியில் தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பட்டா வழங்குவதற்கு முன்பாக எத்தனை வருடம் அங்கே குடியிருந்து வருகிறார் என்றால் 1980 முதல் இருந்து வருகிறார். நான் அந்த முகவரியில்தான் குடியிருந்து வருகிறேன் என்பதற்காக ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல தாவா சொத்தில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் பொறுத்து வரி ரசீது, மின் ரசீது ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1988, 1989 ஆண்டுகளில் சின்னகலையம்புத்தூரை சேர்ந்த வேலப்பநாயக்கருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் எனது தாயாருக்கு பட்டா வழங்குவதற்கு முன்பே குடியிருந்து வருகிறேன் என்று சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுப்பிரமணி என்னுடைய தாத்தா முறை வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய தாத்தா மற்றும் பிரதிவாதிகள் தான் எனக்கு வரன் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தொட்டியன் தோட்டம் மற்றும் காந்திநகருக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் 3 செண்ட் ஆகும். என்னுடைய திருமண பத்திரிக்கையில் தாத்தா சுப்பிரமணி பெயர் போட்டுள்ளோம் என்றால் சரிதான். 1, 2, 3 பிரதிவாதிகள் எனது தூரத்து உறவினர்கள் மற்றும் பக்கத்து தெருவைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரிதான். என்னுடைய தாயாருக்கு பட்டா எந்த அதிகாரியால் வழங்கப்பட்டது என்ற

விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பட்டா எண் 47/1பி ஆகும். பட்டா உள்ள இடத்தில் எவ்வளவு இடத்தில் வீடு கட்டியுள்ளது, எவ்வளவு இடம் காலியாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்துக்கள் யாருடைய பட்டா இடம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தென்புறத்தில் சித்ரா என்பவரின் வீடு உள்ளது. வழக்கு சொத்தில் நான் எனது பெற்றோர்கள் தான் இருந்து வந்தோம். அதன்பிறகு என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள். பின்னிட்டு எனது தாய் தந்தை தான் இருந்தார்கள். அதன்பிறகு எனது தாயார் இறந்துவிட்டார். அதன்பிறகு நானும் எனது தகப்பனாரும் இருந்து வருகிறோர். நான் அவ்வப்போது தாராபுரம் சென்று வந்தேன். எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு நான் மட்டும் வந்து போய் கொண்டிருந்தேன். தற்போது அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தாய் தகப்பனார் தாவா சொத்தில் குடியிருந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரேசன் கார்டு, ஆதார் கார்டு, இறப்புச்சான்றிதழ், வாரிசுசான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு நான் வந்துபோய் வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் குடியிருந்து வரும் தாவா சொத்தில் தகர வீடு உள்ளது அதற்கான புகைப்படங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவர்கள் சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை நாட சொல்லிவிட்டார்கள். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது குறித்து ஊர் பெரியவர்கள் வைத்து பேசினேனா என்றால் பேசினேன். சின்னத்துரை, ராசு மற்றும் நிறைய நபர்களை வைத்து பைசல் பேசினேன். எந்த தேதியில் எங்கு வைத்து பேசினேன் என்றால் சின்னக்கலையம்புத்தூரில் வைத்து பேசினேன். எந்த தேதி என்பது தெரியாது. எனது வீட்டுக்காரரை தாக்கி விட்டார்கள்என்பது குறிதது காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வீட்டுக்காரரை தாக்கினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2024.02.27 12:58:04 +0530

District Munsif,

Palani.